**செ.வெ. எண்: 449** **நாள்: 14.07.2011**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை இன்று **(14.7.2011)** தலைமைச் செயலகத்தில், கல் குவாரி கிரஷர் மற்றும் லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் திரு கே. சின்னசாமி அவர்கள் சங்க பிரதிநிதிகளுடன் சந்தித்தார்.

இந்த சந்திப்பின் போது கல்குவாரிகளில் தற்போது நடைமுறையிலுள்ள நடை சீட்டு முறைக்குப் பதிலாக பரப்பளவு அடிப்படையில் ஆண்டு குத்தகைத் தொகை நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும், இதன்மூலம் அரசுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும் என்றும் தொழில் செய்வதிலுள்ள சிரமங்கள் குறையும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் தெரிவித்தார்கள். மேலும், கல்குவாரிக்குத் தேவையான வெடிமருந்து பொருட்களை அரசு வெடிமருந்து நிறுவனத்திடமிருந்து முகவர் இன்றி மாவட்ட சங்கம் மூலம் கிடைப்பதற்கு ஆவன செய்யவேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொண்டனர்.

கல் குவாரி கிரஷர் மற்றும் லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் கோரிக்கைகளை கனிவுடன் கேட்டறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கட்டுமானப் பொருள்களின் விலை அதிக அளவில் உள்ளதால், பொதுமக்களின் நலன் கருதி கருங்கல் ஜல்லி விலையினை குறைக்க வேண்டும் என அறிவுறுத்தினார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக்கிணங்க கருங்கல் ஜல்லி **40** மி.மி., **20** மி.மி., **12** மி.மி. மற்றும் **6** மி.மி. ஆகியவற்றின் விலையை தற்போதைய விலையிலிருந்து உடனடியாக லோடு ஒன்றுக்கு **700** ரூபாய் அளவிற்கு குறைத்து கட்டுமானத் தொழில் வளர்ச்சிக்கும், அரசிற்கும் உறுதுணையாக இருப்பதாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் சங்கத்தினர் உறுதியளித்தார்கள்.

இந்த சந்திப்பின் போது மாண்புமிகு தொழில்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், கல்குவாரி கிரஷர் மற்றும் லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் மாநில செயலாளர் திரு ஆர். ஜெயராமன், மாநில பொருளாளர் திரு. கே.பாலசுப்பிரமணியம், ஈரோடு மாவட்ட தலைவர் திரு. எஸ்.கே.யோகநாதன், கரூர் மாவட்ட தலைவர் திரு. எம்.பழனியப்பன், சேலம் மாவட்ட செயலாளர் திரு. P.ராஜா மற்றும் கன்னியாகுமரி மாவட்டச் செயலாளர் திரு. பீட்டர்பால் ஆகியோர் உடனிருந்தனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 14.7.2011